கலைஞரின்
நவமணிகள்

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு

கலைஞரின் நவமணிகள்

பாரதி பதிப்பகம்
126/108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
த.பெ.எண். 4984
போன் : 2434 0205

விலை : ரூ. 7.00

❑ KALAIGNARIN NAVAMANIGAL ❑ Collection work
❑ First Edition : August 2005 ❑ Price Rs. 7.00
❑ Publisher : BHAARATHE PATHIPPAHAM, 126/108, Usman Road, T.Nagar, Chennai -600 017. P.B. No: 4984.
❑ ☎: 24340205. ❑ Printed at: Sivakami Printo Graphics, 160, Big Street, Triplicane, Chennai-600 005.
❑ ☎ 28445051

கலைஞரின் நவமணிகள்

நான் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் பழக்கமுள்ளவன் மாத்திர மல்ல; தாக்குதலை விரும்புகிறவனும் கூட. தாக்கப்பட்டால்தான் நானே கூட மெருகு பெற முடியும்.

❁

சலவைக்கல் இருக்கிறது. அதிலிருந்து உலக உத்தமர் காந்தியார் உருவம் செய்யலாம்; அவரைச் சுட்டுக் கொன்ற கொலைபாதகன் கோட்சேயின் உருவத்தை யும் செதுக்கலாம். காந்தியார் சிலை செதுக்கப்பட்ட சலவைக்கல் நல்லது. கோட்சே உருவமுள்ளது கெட்டது என்று சலவைக் கல்லையா பழிப்பது?

❁

காதல் ஒரு தொடர்கதை; ஆனால் அதிலே சங்கடம் அனுபவிப்பவர்களும், சஞ்சலம் கொண்ட வர்களும், சந்தேகம், பிடித்தவர்களும், சாவுக்குத் துணிந்தவர் களும் கதாபாத்திரங்களாக இருக்கிறார்கள்.

❁

சிறுகதைகள் முடிந்து விடலாம். ஆனால் காதல் என்னும் தொடர் கதை, உலகம் உள்ளவரை முடியவே முடியாது. இன்ப முடிவுகளும் பின்னிப் பின்னி வரும் காதல் ஒரு பெரிய தொடர்கதைதான்.

❁

'மே' என்பது உலகத் தொழிலாளர் களின் உற்சவ தினம். 'தை' என்பது திராவிடத் தமிழரின் உழைப்பு வெற்றி தினம். ஆகவே இரண்டு பெருந்திரு நாட்களும் சேர்ந்தமைந்த பொருத்தமான பட்டம் 'மேதை.'

❁

தியாகம் விலை பேசப்படும் பொருளாக்கப்படக் கூடாது.

❁

தன்னலமற்ற, நற்பயன் கருதி, பயன் தரும் முடிவைக் காணச் சலியாது, சளைக்காது ஆற்றும் செயல், செயலாற்றும் பண்பு-தியாகம்.

❁

தோழமை, மனிதாபிமானம், தன்னைப் போன்றவன்தான் மற்றவனும் பிறப்பில், உழைப்பில் என்ற எண்ணம், பகுத்தறிவு இவை தோன்றுவது தான் பொதுவுடைமைக்கு அடிப்படை.

❁

இலஞ்ச தேவதை விளையாட ஆரம்பித்தால் எத்தனையோ கொலைகளும், கொள்ளைகளும் பணத்தின் முன் பல்லையிளித்து விடுவது நாடறிந்து உண்மைதானே!

❁

ஏழு எருதுகளை எதிர்ப்பதென்றால் சிங்கத்திற்கும் சங்கடம்தானே! பாயும் புலி பல்லாயிரம் ஆடுகளைக் கண்டால் சற்று மலைக்கத்தானே செய்யும்! வாளை எடுத்தால் வான்மீன் உதிரப் போர் செய்யும் வலிவுடைய வீரன், வரிசையாக எத்தனை அணிவகுப்புகளைத்தான் அழிக்க முடியும்?

❁

மான் தோலிலே வேங்கை அதிக நாள் வாழ முடியாது.

❋

பலாத்காரமற்ற விடுதலைக் கிளர்ச்சியைப் பகுத்தறிவுள்ள எந்த மனிதனும் மறுக்க மாட்டான்.

❋

இங்கே இப்போது தொழிலாளர்கள் சவத்தைப் புதைத்து விட்டு நீ சிரிக்கிறாய். எதிர் காலத்தில் உன் சவத்தைப் புதைத்து விட்டு அழுவதற்கு ஆள் இருக்க மாட்டார்கள்.

❋

இந்த பூமியில் ஏமாளிகளும் இருக்கக் கூடாது; இளிச்சவாயர்களும் இருக்கக் கூடாது.

❋

அழிய முடியாதது ஒன்று இருக்கிறது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஓடினாலும் யுகாந்திரங்கள் உருண்டு போனாலும் அழியாதது - புகழ்.

❋

பொது வாழ்வு என்பது கரும்பைச் சுவைப்பது போலல்ல; கரும்பைக் கைகளால் தடவுவதுபோல. தடவிப்

பார்த்தால்தான் தெரியும் கை முழுவதும் ‘சுனை’கள் குத்திக்கொள்ளும்.

❁

உலகத்திலே அழுவதற்கு அர்த்தமே தெரிய வில்லை. விபசாரியும் அழுகிறாள்; பத்தினியும் அழுகிறாள். நல்லவனும் அழுகிறான்; கெட்ட வனும் அழுகிறான். பணக்காரனும் அழுகிறான்; பாட்டாளியும் அழுகிறான்.

❁

பணக்கார மனிதர் மிருகக்கூட்டம். அதில் மனிதர்களும் தவறிப் பிறப்பதுண்டு. ஏழை மனிதர் குழுவில் துன்பம் தாங்கமாட்டாமல் மிருக வளர்ச்சி யடைவோரும் உண்டு.

❁

தின்பதற்காக ரோஜாப்பூவைப் பறிப்பவர்கள் அதன் மென்மையையும் வண்ணத்தையும் வியந்து கொண்டா இருப்பார்கள்? இதழ்களைக் கிள்ளி வாயில் போட்டுக் கொண்டே கடைசியில் அந்தக் காம்பை எறிந்து விடுவார்கள்.

❁

திருக்குறள் ஓர் இன்பச்சோலை. அதை இதுவரை பாலையென எண்ணிக் கிடந்தோம். சோலைக்குச் செல்வோம்.

அதிலே கருத்து மயில் ஆடும்; கொள்கைக் குயில் பாடும். நல்ல விளக்கங்கள் என்ற புள்ளி மான்கள் துள்ளும். அத்தகைய சோலையிலே ஆனந்தத் தென்றலாம் காவியத்தென்றல் வீசும்.

❁

ஒரு காலத்தில் பெண்கள் நாட்டினுடைய கண்களாக இருந்தார்கள். கையில் வாளெடுத்துப் போர் புரியவும், சூளுரைத்து நாடு காக்கவும் தங்களுடைய நாட்டுக்குத் தேவையான நல்ல காரியங்களிலே ஈடுபடுகிறவர்களாகவும் பெண்கள் இருந்தார்கள்.

❁

ஒரு அரசு செயல்படுத்துகின்ற திட்டங்கள் வெற்றிகரமான விளைவுகளைத் தர வேண்டுமானால், அந்தத் திட்டத்தினுடைய பயனை அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டுமானால் அப்படி பகிர்ந்து கொள்ளுவதற்கு மக்கள் பெருக்கம் அணை போட்டுத்தடுக்கப் பட்டாக வேண்டும்.

❁

ஈ ஒன்றைத் தேன் குடத்தில் போட்டுவிட்டு, 'கொஞ்சம் பற பார்க்கலாம்' என்று கூறுவதும், தாங்க முடியாத அளவுக்குப் புகழாரத்தைச் சூட்டி

விட்டு, 'கொஞ்சம் பேசு பார்க்கலாம்' என்று கூறுவதும் என்னைப் பொறுத்த வரை ஒன்றாகத் தான் தோன்றுகிறது.

❁

வலிய கோட்டானைக் கூடக் காக்கை வென்றுவிடும். இரவிலே கோட்டானை வெல்லக் காக்கையால் முடியாது. ஆனால் பகல் நேரத்தில் கேட்டானைக் காகம் வென்று விடும். 'காலம் கனியட்டும் காத்திருப்போம்' என்று காத்திருந்த கொக்கின் குறி தவறாத குத்தைப் போல நமது வெற்றியைத் தேடுவோம்.

❁

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எனக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. மதுரைப் பல்கலைப் கழகம் நாவலருக்கு டாக்டர் பட்டம் வழங்கி யுள்ளது. அண்ணாமலையில் 'மலை' யைத்தள்ளி விட்டு மதுரையில் 'ம' வைத் தள்ளிவிட்டுப் பார்த்தால் அண்ணாதுரைப் பல்கலைக் கழகம் தான் டாக்டர் பட்டம் அளித்தது என்றால் எந்தத் தவறுமில்லை.

❁

இந்நாளில் கரும்பினைக் காண்கிறேன். சுவைத்திடு முன்னே அண்ணனின் சுவைத் தமிழ் தானே இனித்திடுகின்றது நெஞ்சில்!

பால் பொங்கிடும் புதுப்பானையில் எனினும், அவர் நம்பால் அன்பால் விளைந்த பாச உணர்வுதானே பளிச்சிடுகின்றது மனத்தில்.

❁

சிந்தனையில்லாதவர்கள் எதையும் நம்பு வார்கள். எதையும் நம்பச் சொல்வார்கள்; நம்பிக்கை என்பது ஒருவித நோய். மனித சமுதாயத்தின் தொத்து நோய்.

❁

காலைப் பொழுதிலே அரும்பாய்த் தோன்றி, பகலெல்லாம் பேரரும்பாக தழைத்து, மாலையில் மலராக மாறுகிறது... காமநோய்!

❁

வைத்தியரிடம் வேதனை தரும் ஊசியும் இருக்கிறது. நோய் வேதனையைத் தீர்க்கும் மருந்தும் அதனுள் - அந்த ஊசியினுள் இருக்கிறது.

❁

எல்லையற்ற வானவெளி. விண் வெளியின் விளிம்பு எது என்று இயற்கை கோடு போட்டு வைக்கவில்லை.

❁

மளிகைக்கடையில் சாமான் வாங்கும் சாதாரணப் பேர்வழி கொஞ்சம் உளுந்தை எடுத்துத் தன்கூடையில் போட்டுக் கொண்டால் அது திருட்டு. கடைக்காரன் முக்கால் மணங்கை முழு மணங்காக அளந்தால் அது வியாபாரத்தந்திரம்!

❁

சாதாரண மனிதன் பொய் சொன்னால் அதுபஞ்சமா பாதகம். வக்கீல் சொன்னால் அது திறமை! குடிசையில் வாழும் குப்பன் குடித்துவிட்டு ஆடினால் அவனுக்குக் குடிகாரப்பட்டம். அதே காரியத்தைப் பெரிய மனிதர் என்று பேசப்படுவோர் செய்தால் "என்ஜாய் மெண்ட்".

❁

சாவின் மடியில் மட்டுமேதான் அந்த எரிச்சலை அடக்கக்கூடிய குளிர்ச்சி யெனும் மாமாருந்து இருக்கிறது.

❁

படிச்சவங்களோட சிநேகம் கிடைக் கிறது கூட பெரிசு இல்லை. படித்த புத்திசாலிகளோட சிநேகம் கிடைக்கிறது பெரிய பாக்கியம்.

❁

வாலிப உள்ளத்தின் வசீகர ஓவியம் காதல்!

❁

காதலாம் காதல் - பித்துப் பிடித்த சில எழுத்தாளக் கழுகுகள் பிராண்டி வைத்த காட்டு மிராண்டிக் கற்பனை. காமத்துக்குப் போடுகின்ற திரை.

❁

இன்று அழகு - நாளை விகாரம். இளந்தளிர் - பழுப்பாகும். இளமை - கிழமாகும். அழகு - அலங்கோலமாகும்!

❁

வேதனைகளுக்கு இடையிலேயும், பல்வேறு சோதனைகளுக்கு இடையிலேயும் கடமையைச் செய்யவேண்டும்.

❁

நல்லது ஒன்று தோன்றுகிற நேரத்தில் அதோடு சேர்ந்து சில நேரங்களில் பொல்லாததும் தோன்றும்.

❁

கோழையாகலாம், ஆனால் துரோகியாகி விடக்கூடாது.

❁

துரோகிகள் கோழைகளாக இருப்பார்கள்; ஆனால் கோழைகள் எல்லாருமே துரோகிகளாக இருக்கமாட்டார்கள்.

❁

மோதிக் கொள்வது என்பது சாதாரணமான விஷயம். ஆனால் அதனால் ஏற்படுகின்ற பலன், விளைவு என்ன? என்பதுதான் மிக முக்கியமான விஷயம்.

❁

நாங்கள் பாதகங்களையும் சாதகங்களாக ஆக்கிக்கொள்ளக் கூடியவர்கள்...! பழி வாங்குகின்ற கெடு நினைப்பு இல்லாதவர்கள்.

❁

அழகான - ஆர்வம் ததும்புகின்ற எழுச்சிக்கு அணை போட முடியுமா?

❁

'சீப்பை எடுத்து ஒளித்து வைத்து விட்டதைப் போலக் கனவு கண்டேன். ஆகவே கல்யாணம் நடக்காது' என்று எண்ணிய பைத்தியக்காரிக்கும்... அரசியல் கனவு கண்டு கொண்டிருப்பவர்களுக்கும் என்ன வேறுபாடு!

❁

சென்னையில் கொண்டை முடிந்தால், நெல்லையில் பூ வைக்கக்கூடாதா?

❁

குகைகளில் சிங்கமும் படுத்திருக்கும்... பகை வளர்க்கும் சிறு நரியும் ஒண்டிக் கொண்டிருக்கும்.

❁

தன்னந்தனிமையில் ஓர் அழகான பெண்ணும் வாலிபனும் விடப்படும் சூழ்நிலையில் எவ்வளவோ விபரீதங்கள் காதல் என்ற பெயரால் அரும்பிப் பூத்துக் காய்த்துக் கனிந்து போயிருக்கின்றன.

❁

புகை நுழையாத இடங்களிலும் பொல்லாத துரோகிகள் நுழைந்து விடுவார்கள்.

❁

தூங்குவது போல் பாசாங்கு செய்தால் சில நேரங்களில் மிகுந்த வேதனை ஏற்படும்...தூக்க நடிப்பில் இமைக்கதவுக்குள்ளே உருண்டு கொண் டிருக்கும் விழிகள் வேறு காட்டிக் கொடுத்துவிடும்.

❁

...வீரர்கள் வாள்பிடித்துப் பழகிய வர்களே தவிரப் பகைவரின் தாள் பிடித்துப் பழகியவர்க ளல்லர்.

❁

விழிகளிலே ஊசிகளைச் செருகினா லும் வீரத்தை விலை கூறிடமாட்டார்கள். உண்மைத் தமிழர்கள்.

❁

நெஞ்சிலே ஈரம் இல்லாதவனுக்கு வீரன் என்ற பெயரில்லை - முரடன் என்று பெயர், காட்டு மிராண்டி என்று பெயர்.

❁

கதிரவனைக் கண்டு மலர வேண்டிய தாமரை சந்திரனைக் கண்டு மலர்ந்து விட்டது.

❁

தன்னைக் கொன்று புசிக்கப் போகிறவன் கையிலேயே அமர்ந்து புறா தானியத்தை கொறித்துக் கொண்டிருக்கும், சற்று நேரத்தில் பலிபீடத்தில் தலையை இழக்கப்போகும் ஆட்டுக்குட்டி, பூசாரியின் கையிலுள்ள பசும் புல்லை நுனிப்பல்லால் கடித்துச்சுவை பார்த்துக் கொண்டிருக்கும்.

❁

கோடையின் கொடுமை தாங்காது பாம்பு படமெடுத்தவாறு தன்னை மறந்து நிற்கும். அதன் நிழலிலே வந்து தவளை ஒண்டிக்கொள்ளும்.

❁

பல்லி ஒன்றின் வாயிலே சிக்கிக் கொண்ட பூச்சி தப்பிக்க முடியுமாவெனக் கணநேரம் சிறகுகளை அடித்துக்கொண்ட பின்னால் வாழ்வைச் சத்தமின்றி முடித்துக் கொள்கிறது.

❁

பழிவாங்கும் உணர்ச்சியும், சதிபுரியும் ஆவேசமும் உயிர் மூச்சோடு வெளியேறிய பின் தூய்மையாகிறது.

❁

மலர்ப்படுக்கையில் படுத்திருக்கும் போது திடீரென அது முட்படுக்கையாக ஆகிவிட்டால்...!

❁

ஒருவருடைய திறமை இருக்கிறதே அது உதயசூரியனின் ஒளிக்கதிரைப் போன்றது.

❁

அலையில்லாத கடலாவது, ஆசையில்லாத பெண்ணாவது இந்த உலகத்தில் ஏது?

❁

பெண்களுக்குள்ள ஆசை கடல் என்றால் அழுக்காறோ வானந்தான்!

❁

நெருப்புச் சூடுபட்டுப் பாகு கரையலாம். பாறை கரைந்திடாது.

❁

குச்சியைக் குச்சியால் சந்திக்க வேண்டும். கூர்வாளைக் கூர்வாளால்தான் சந்திக்க வேண்டும்.

❁

பெண்களிடம் பேசும் பொழுது எந்த வார்த்தையையுமே அளந்து பேசிட வேண்டும்.

❁

இளமைத் துடிப்பால் நம்மை அறிந்தோ அறியாமலோ நாம் இடறி வீழ்கின்ற காலங்களும் உண்டு.

❁

கறுப்புப் பெண் சிரித்தால்தான் முத்துப் பற்களுக்கு முதலிடம் கிடைக்கிறது.

❁

நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு அப்பீல் உண்டு; நெஞ்சுக்கு வழங்கப்பட்ட நீதிக்கு அப்பீல் ஏது?

❁

கனகமணிக் கட்டிலை விட்டு இறங்காதவன் கரடு முரடான பாதைகளைப் பற்றி எங்ஙனம் புரிந்து கொள்ள முடியும்?

❁

கோடிகோடியாகக் குவிந்து கிடக்கும் பொன் நாணயங்கள் அல்ல செல்வம், தேடித் தேடி அலைந்தாலும் கிடைக்க முடியாத திரவியமே உற்ற நண்பர்கள்.

❁

எந்த ஒரு இயக்கத்தின் வளர்ச்சிக்கும் தொண்டர்களே காரணமாயிருக்கிறார்கள். அவர்களைக் கருவேப்பிலையாக்கி விடக் கூடிய தலைவர்களும் சில இயக்கங்களில் உண்டு.

❁

சிறை சென்றவர் செங்கோலோச்சுவதும் செங்கோலேந்திகள் சிறை செல்வதும் சகஜமாகி விட்டது.

பற்று வைக்கப்பட்ட பொருளுக்கு ஆபத்து வரும்போது அப்பொருளின் மீது பித்து ஏற்படுகிறது.

பிறக்கும்போதே அறிவாளிகளாகப் பிறப்ப தாக யாரும் ஒப்புக் கொள்வதில்லை.

மக்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள் அல்லர். அவர்கள் சரியாக, திறமையாக வழி நடத்தப்பட வேண்டியவர்கள்.

வாள் வலிமையைக் காட்டிலும் பெரியது பேனா வலிமை. அதைவிடப் பெரியது நாவின் வன்மை.

கடுகடுத்த முகத்திற்கும், அசுரத்தனமான நினைவுகள் - பழக்கங்களுக்கும்... நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

சிரிக்கத்தெரிந்த மனிதன்தான் உலகத்தின் மனிதத் தன்மைகளை உணர்ந்தவன்.

❁

......பெரியார் ராமசாமி - சாக்ரடீஸ்...... அறிஞர் அண்ணா - பிளாட்டோ...... கலைவாணர் (என்.எஸ். கிருஷ்ணன்) இவர்களின் சமகாலத் தலைவரான அரிஸ்டோபேன்ஸ்.

❁

மனிதன் தன்னுடைய ஆழமான துன்ப தூய ரங்களை மோசமான இன்பங்களால் மறைக்க முயலுகிறான்.

❁

உப்புக்கும் உறைப்பு சொரணைக்கும் சம்பந்தமிருக்கிறது.

❁

வெளிப்பகை யுத்தத் தளவாடங்களோடு வரும். உட்பகை கறுப்புச் சந்தைக்காரர்கள், கொள்ளை வியாபாரிகள், பதுக்கல்காரர்கள், ஐந்தாம் படையினர் ஆகியோர் உருவிலே வரும்.

❁

பரதம் என்ற சொல்லில் 'ர' என்கிற எழுத்தை எடுத்துவிட்டால் 'பதம்'

என்றாகிறது. பதம் இல்லையேல் நடனம் இல்லை. 'ர' எழுத்தில் கீழே உள்ள நீட்டலை எடுத்து விட்டால் 'பாதம்' ஆகிறது. இது நடனத்துக்கே உயிர். 'ப'வை எடுத்தால் 'ரதம்' போன்று அலங்கரித்துக் கொண்டால்தான் சோபிக்கும். முன்னால் உள்ள இரு எழுத்துக் களையும் எடுத்து விட்டால் மிஞ்சுவது 'தம்'. இது இல்லா விட்டால் நடனம் ஆடவேமுடியாது.

❁

ஜனநாயகத்தில் அவ்வப்போது மாறு படும் அரசாங்கத்தின் செயல்முறைகளை வைத்து அந்த நாட்டு மக்களையே வெறுக்கும் மனப்போக்கு கூடாது.

❁

தான் உயிருக்கு மன்றாடிக்கொண் டிருக்கும் போதும் தன்மக்களின் முகம் சுண்டக்கூடாது என்பதில் குறியாக இருப்பது தாய்க்குணம்.

❁

அத்திமரத்தை எடுத்துக்கொண்டால் உச்சி யிலும் கிளையிலும் அடிமரத்திலும் காய்கள் காய்க்கின்றன. எங்கே காய்த்தாலும் அதனை அத்திக்காய் என்று சொல்கிறோமே தவிர அடிமரத்தில்

காய்ப்பதை பரங்கிக்காய் என்றோ, கிளையில் காய்ப்பதை புடலங்காய் என்றோ உச்சியில் காய்ப்பதை வெண்டைக்காய் என்றோ அழைப்பதில்லை.

❀

தென்னை சிறு கன்றில் இருந்து வளர்ந்து, அது தருகின்ற ஒவ்வொரு மட்டையும் மக்களுக்கென்று பயன் படுகிறது. தென்னை மரமாக ஆன பிறகு பார்த்தால் அங்கே தெரிகின்ற வடுக்களெல்லாம் என்ன?

❀

ஒவ்வொரு மட்டையும் இருந்த இடம், ஒவ்வொரு மட்டையையும் மக்களுக்காகத் தந்து விட்டு வடுக்களை மாத்திரம் மிச்சமாக வைத்திருக் கிறது.

❀

கரும்பினை சுவைப்பதற்காக எறும்புகள் மொய்ப்பது உண்டு! அந்தக் கரும்பினையே பிழிந்து சாறாக வடிக்கின்ற கரும்பு ஆலைகளும் உண்டு.

❀

வியர்வை சிந்த உழைப்பவர்கள் உண்டு. வியர்வை சிந்தப் பாடுபடுபவர்களும் உண்டு. பேசிக்கொண்டேயிருக்கும் பொழுது நேரமாக நேரமாக உணர்ச்சி

பொங்கி எழுந்த காரணத்தால் வியர்வை சிந்துவதும் உண்டு.

❁

கலைப்பணி என்பது எளிதன்று. முள்ளுக் கிடையே மலரைப் பறிப்பது போலவும், மூச்சை அடக்கி முத்தை எடுப்பது போலவும், அலையும் காற்றுக் கிடையே அகல்விளக்கை அணையாது காப்பது போலவும், சோதனைகளுக் கிடையே அல்லவா கலையை வளர்க்க வேண்டியிருக்கிறது.

❁

வரப்புகளில் ஒற்றையடிப் பாதையில் காலை இளங்காற்று வாங்குவதற்காக வந்து அமர்ந் திருக்கிற சின்னச் சின்ன நண்டுகள்...... பாட்டாளி களின் பாத ஒலி கேட்டு மின்னல் வேகத்தில் ஓடிப்பதுங்கிக் கொள்வதும் உண்டு. அவர்களின் கால்களில் தவறுதலாக மிதிபட்டு விட்ட நச்சுப்பாம்புகள், அவர்கள் மீது சீறி விழுந்து கடித்து விடுவதும் உண்டு.

❁

........உழைக்கும் தெய்வங்கள்தானே உலகத்து மக்களின் வாழ்வுக்கு அருள்பாலிக்கக் கூடியவை.

❁

சன்னரக நெல்லை விளைவித்துக் கொடுக்கும் ஏழைகளின் கூட்டத்திற்குச் சில நேரங்களில் மோட்டாரக அரிசிகூடச் சாப்பாட்டுக்குக் கிடைப்பதில்லை.

❁

...ஊர்வம்பு இழுப்பது-நேரடியாக மோதுவது-ஜாடை பேசுவது-நல் வார்த்தைகளுக்கே நாவில் இடம் தராமல் இருப்பது-குடும்பம் கலைப்பது-இதற்கென்றே சில ஜென்மங்கள்... ஊருக்கு ஊர்-வீதிக்கு ஒன்றிரண்டு-உலகத்தில் இருக்கத்தான் செய்கின்றன.

❁

பொதுக்கூட்டங்களில் பேசிக் கொண்டிருக்கும் போது சிலநேரங்களில் மேடையில் உள்ள விளக்கின் வெளிச்சத் திற்காக வட்டமிடும் பூச்சிகளில் ஒன்று சொற்பொழிவாளரின் சட்டைக்குள் புகுந்து முதுகிலே ஊசிபோலக் குத்தும். வலிக்கின்ற இடத்தைத் தடவியும் கொடுக்க முடியாமல், முதுகில் ஊர்ந்து கொண்டிருக்கிற பூச்சியையும் எடுக்க முயற்சி செய்யாமல் பல்லைக் கடித்துக் கொண்டு மிகப்பொறுமையாக அந்தப் பேச்சாளர் வேதனையைப் பொறுத்துக் கொண்டு உரையைத் தொடர்ந்து நிகழ்த்துவார்.

❁

வாழும்போது மனிதர்களைப் பிரித்து வைக்கும் சாதிவெறி, அவர்கள் இறந்த பிறகாவது தணிந்து விடுகிறதா?

❁

ஒவ்வொருவருடைய உள்ளமே ஒரு உலகம் தான். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஒரு உலகம் இருக்கிறது.

❁

சூரியன் ஒளியைத் தருகிறான். அதில் விதைப்பவர்கள் விதைத்துக்கொள்ள வேண்டும். வானம் மழையைத் தருகிறது. அதை வயலுக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

❁

நமக்குப் பெரும்பாலும் புரிந்த மொழியில் சொல்வது புரியாது, புரியாத மொழியில் சொல்வது தான் புரியும்.

❁

மலர்களில் மணமுள்ள மலரிருக்கும். மணமில்லாத மலரும் இருக்கும். சில மலர்கள் அழகாக இருக்கும். மணம் இருக்காது. சில மலர்களில் மணம் இருக்கும். அழகு இருக்காது.

❁

நல்ல குறிக்கோள் பசியை ஒழிப்பது, சிலநேரங்களில் பசியின்போது நல்ல கருத்துக்கள் வருவதுண்டு.

❀

எரிப்பதிலே பலவகை உண்டு. அடுப் பெரிப்பது நல்ல அறுசுவையான உணவு கிடைப்பதற்காக; விளக்கு எரிப்பது வீட்டிலே ஒளி கிடைப்பதற்காக!

❀

சூரியன் உதிக்கும்போது இருளை விரட்டிக் கொண்டு தான் உதிக்கிறது.

❀

மாறுபட்ட சூழ்நிலைகளுக்கிடையே தான் மக்கள் பணியாற்றிட மனிதர் குல மாணிக்கங்கள் பிறக்கிறார்கள்.

❀

தமிழைப்படிப்பது என்பது வேறு, தமிழில் படிப்பது என்பது வேறு!

❀

தமிழ் உயர்ந்தது, தலைசிறந்தது, ஒளி மிக்கது உயிரானது.

❀

கல்லூரிகளிலும், கலாசாலைகளிலும் பயிலு கின்ற மாணவர்கள் நாற்றங்காலிலே இருக்கின்ற பயிர்கள்.

'நாம்' என்பதை விட்டு 'நான்' என்று சொன்னால் அகந்தை தான் மிஞ்சும்.

'நாம்' என்பது ஜனநாயகம், 'நான்' என்பது சர்வாதிகாரம். யதேச்சாதிகாரம்.

நோயாளிகளைக் குணப்படுத்துவதில் மருந் துக்கு அடுத்தபடியான இடத்தை மருத்துவனின் இன்முகந்தான் பெறுகிறது.

மொட்டையடிப்பது மத சம்பிர தாயம்... கல்யாணம் வாழ்க்கை சம்பிரதாயம்.

மனிதனுக்கு மனிதன் ஆண்டவன் படைத்த அவயங்களை சிலமாறுதல் பண்ணிக்கொள்வது தானே மதம்.

தவறு செய்ய ஆரம்பிக்கிறவனுக்கு அஸ்தி வாரத்திலே ஏற்படுவதைவிட அதிக அச்சம் உச்சி போய்ச் சேரும்போதுதான் தோன்றுகிறது.

❁

முடிந்துபோன அத்தியாயம் மூடப் பட்டு விட்ட புதைகுழி.

❁

ஆண்டவன் கல்லாகவும் இல்லை. சிலை யாகவும் இல்லை; கண்ணுக்குத் தெரியாமலே இருக்கிறார்.

❁

காட்டாறு காட்டிலேயே பரந்து விரிந்து மறைந்து ஒழிந்து விடும். அல்லது கழனிக்கிடையே செல்லும் குட்டி வாய்க்கால் போல சிறுத்துக் கடலிலே கலக்கும்.

❁

பொய்யைப் பத்துமுறை வற்புறுத்திச் சொன்னால் மெய்யாகத் தோற்றமெடுக்கும்.

❁

உலக மக்களை ஏமாற்றும் பொய்களே உண்மைகளாக உருவெடுக்க முடியும்.

❁

தன்னிடத்தில் மண்டிக்கிடக்கும் குற்றம் குறைகளைத் திரும்பிப்பாராமல் பிறரிடம் இல்லாத குற்றங்களை இட்டுக்கட்டி சிரித்து மகிழ்வதுதானே இந்த விசித்திர பூமியின் விளையாட்டு!

❁

சூர்ப்பனகை மூக்கிழந்தாள்; மூலை யிழந்தாள் என்றாலும் கற்ற நிலையிழக்க வில்லை யென்பதனால்தானே இராவண னின் தங்கையென்ற பெருமையைப் பெறமுடிகிறது!

❁

ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டே யிருந்தால் - அந்த நீடித்த நோக்கிலே 'ரசம்' இருக்காது விரசம்தான் இருக்கும்.

❁

சிற்பி வடிக்கின்ற வெண்பளிங்கு சிலைகளிலே கருவிகளுக்கு வர்ணம் தீட்டுவதில்லை. ஆனாலும் அதன் அழகு அணுவும் குறைவதில்லை.

❁

பூர்வ ஜென்ம பூஜாபலன் என்பார்கள் புத்தியைத்தீட்ட மறுப்பவர்கள்.

❁

பெண் விஷயமென்றால் பேராபத்தும் சிறுதுரும்பாகத்தான் தெரியும்.

❁

குற்றம்புரியாத எத்தனையோ நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள். ஆயுள் தண்டனை - தூக்கு தண்டனை - நாடு கடத்தல்...

❁

பூனை வாய்க் கிளி பூட்டிய கூண்டுக்குள் அடைபட்டால் பூனைக்கு ஏக்கந்தான் பிறக்கும்.

❁

எல்லா ஊரும் நமது ஊரே. எல்லோரும் நமது உறவினரே.

❁

வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்துக் கொணடு வாழ்ந்த பெருமை தமிழ் இனத்திற்கு உண்டு.

❁